**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.207/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திரு. நாகராஜன் |
| Father's Name/Husband Name: | திரு. லெட்சுமணன் |
| Village : | நொச்சிக்குளம் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 63/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1, 2, 4 ஆஜர். 3ம் எதிரி இறந்துவிட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது நொச்சிக்குளம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் கண்டுள்ள கைரேகையை நான் போலிசாரிடம் செய்து கொடுக்கவில்லை. நான் கையெழுத்து செய்வது வழக்கம். போலிசார் என்னை விசாரித்து கையெழுத்து கேட்டார்கள் நான் செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கைரேகை என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 20.02.2020ம் தேதியன்று பகல் 12 மணியளவில் வழக்கு சம்பவயிடத்தில் போலிசார் விசாரணை மேற்கொண்டு என் முன்னிலையிலும் சாட்சி பாஸ்கர் என்பவர்

முன்னிலையிலும் சம்பவயிடம் குறித்து போலிசார் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது பார்வை மகஜரில் முதலாவது சாட்சியாக கைரேகை செய்துவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.